வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், மாதவரம்.

வழக்கு எண். CC 539/2020

வழக்கு சாட்சி PW 5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நந்தகுமார், உதவி ஆய்வாளர், புழல் காவல் நிலையம் | ஜாதி | |
| கணவர்/தந்தை | மாதவம்பிள்ளை | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 58 |

தேதி 04.11.2025

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.

எதிரி ஆஜர் இல்லை. மனுதாரர் தரப்பு 355 BNSS பிரிவின் கீழ் மனுத்தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது எம்.3 புழல் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கினை புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர், திரு. செந்தில்நாதன், அவர்கள் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் கால விரையம் கருதி இவ்வழக்கின் புகார்தாரர் எதிரியுடன் சமரசமாக சென்று வழக்கை மேல்நடத்த விரும்பாத காரணத்தினால் வழக்கு கோப்புகளை கையாள்வதின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். 06.10.2020 அன்று காலை 08.00 மணிக்கு இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியாக காவல் உதவி ஆய்வாளர் செந்தில்நாதன் நிலைய பணியில் இருந்தபோது நாகராஜன் என்பவர் அளித்த புகாரினை பெற்று எம்.3 புழல் காவல் நிலைய குற்ற எண். 2739/2020 இதச பிரிவு 341, 294(b), 323, 506(2) உடன் பிரிவு 3 TNOPPD ACT முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். மேற்படி முதல் தகவல் அறிக்கையானது அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் நாகராஜன், பிரமிளா, பிரதீப்

ஆகியோரை விசாரித்து தனிதனி வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அன்றைய தினமே சாட்சிகளான ஜெயச்சந்திரன், அருள்ராஜ் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயாரித்துள்ளார். அவை முறையே அ.த.சா.ஆ.5 மற்றும். அ.த.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் அன்றைய தினமே காலை 11.00 மணிக்கு காவங்கரை சந்திப்பு அருகே எதிரியை கைது செய்து சாட்சிகள் அப்பு, பிரதீப் ஆகியோர் முன்னிலையில் அவர் தன்னிச்சையா முன் வந்து அளித்த ஒப்புதல் வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளார். அதன் அனுமதிக்கப்பட்ட பகுதி " நான் சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்புக் கம்பியை எனது வீட்டின் பக்கத்தில் இருப்பதை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன்" அ.த.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் அடிப்படையில் வழக்கு சொத்து அதே சாட்சியின் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றுதல் மகஜர் அ.த.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி நீதிமன்ற காவலில் உட்படுத்தப்பட்டார். எதிரி மீது விசாரணையில் சட்டப்பிரிவு ஆனது இதச பிரிவு 341, 294(b), 323, 506(2) ன் கீழ் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையின் கீழ் பிரிவு மாற்றம் செய்யப்பட்டது. மேற்படி சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையானது அ.த.சா.ஆ. 9 ஆக குறியீடுச் செய்யப்படுகிறது. பின்னர் எதிரி மீதான விசாரணையை முடித்து இதச பிரிவு 341, 294(b), 323, 506(2) –ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையானது தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை**

ஆவணங்களின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் ஆமாம். சம்பவத்தைக் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். விசாரணை அதிகாரி சம்பவத்தை சரியாக விசாரணைச் செய்யாமல் எதிரி மீது பொய்யாக வழக்கு பதிவுச் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**